பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 10 2024 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் 6 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித்திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

2. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின்கீழ், கடந்த ஆகஸ்ட் மாதம் வரை 18 லட்சத்து 53 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர்.

3. சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள ஜார்கண்ட் மாநிலத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி எடுத்துச் செல்லப்பட்ட மூன்று கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ரொக்கம் மற்றும் பரிசுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

4. வடக்கு காஸா பகுதியின் **Beit** நகரில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 87 பேர் கொல்லப்பட்டனர்.

5. ஜோஹர் கோப்பைக்கான ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா 6-4 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

*-- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<>>>>>**

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் 6 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான 23 வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை அடிக்கல் நாட்டினார்.

போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான அரசின் இலக்குகளை எட்டும் வகையில், மத்தியப்பிரதேச மாநிலம் ரேவா விமான நிலையத்தின் புதிய முனையம் சத்தீஸ்கர் மாநிலம் அம்பிகாபூரில் மா மஹாமயா விமான நிலையம், உத்தரப்பிரதேச மாநிலம் சர்ஷவா விமான நிலையம் ஆகியவற்றை பிரதமர் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இந்த புதிய விமான நிலையங்களின் மூலம் ஆண்டுக்கு இரண்டு கோடியே 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பயன்பெறுவர்.

இந்த விமான நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் கட்டமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாரணாசியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையத்தில், புதிய விமான நிலையம் மற்றும் ஓடுதள விரிவாக்கத் திட்டப் பணிகளையும் பிரதமர் இன்று தொடங்கிவைத்தார்.

மேற்குவங்க மாநிலத்தில் பதோதரா, பீகார் மாநிலத்தில் தர்பங்கா, உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ரா, ஆகிய இடங்களில் உள்ள விமான நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய திட்டங்களுக்கும் பிரதமர் இன்று அடிக்கல் நாட்டினார்.

சீர்மிகு நகர இயக்கம் மற்றும் கேலோ இந்தியா திட்டத்தின்கீழ், வாரணாசியில் உள்ள விளையாட்டு வளாகத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டப்பணிகளையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

விளையாட்டுக்கு உயர்தரத்திலான கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில், இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

லால்பூரில் உள்ள டாக்டர் பீமாராவ் அம்பேத்கர் விளையாட்டு அரங்கில், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்குவதற்கான அறைகளையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

சாராநாத்தில் புத்த மதத்தின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வகையிலான சுற்றுலா மேம்பாட்டுப்பணிகளையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

பானாசூர் கோவில், குர்தாம் கோவில், சீரமைப்புப்பணிகளையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கலந்துகொண்டார்.

முன்னதாக, இன்று வாரணாசியில் சங்கர நேத்ராலயாவின் ஆர் ஜெ சங்கரா கண் மருத்துவமனையை பிரதமர் தொடங்கிவைத்தார்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கர விஜேய்ந்திர சரஸ்வதி சுவாமிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், அடுத்த ஐந்தாண்டுகளில் 75 ஆயிரம் மருத்துவப்படிப்புகளுக்கான இடங்கள் கூடுதலாக உருவாக்கித்தரப்படும் என்றும் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் மருத்துவத்துறையில் மிகப்பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவிததார்.

<<<<<>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் இணையதளத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் வரை 18 லட்சத்து 53 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 9 லட்சத்து 30 ஆயிரம் புதிய உறுப்பினர்கள் ஆகஸ்ட் மாதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டு லட்சத்து 53 ஆயிரம் பேர் பெண் உறுப்பினர்கள் ஆவர்.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் உறுப்பினர்களின் சேர்க்கை ஒவ்வொரு மாதமும் கணிசமாக அதிகரித்து வருவது புதிய வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதை காட்டுவதாகவும் தொழிலாளர் நல அமைச்சகம் கூறியுள்ளது.

தொழிலாளர்கள் இடையே தங்களுக்கான நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளதாக கூறியுள்ள அமைச்சகம், 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட இந்த ஆண்டு ஒன்பது சதவீதம் கூடுதலான பேர் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் பதிவு செய்திருப்பதாகவும், தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

அமைப்புசாரா தொழிலாளர்கள் அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கு ஏதுவாக, இ-ஷரம் என்ற சேவை இணையதளத்தை மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா நாளை தொடங்கிவைக்கிறார்.

நாட்டில் உள்ள பல்வேறு அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்த அனைத்து தகவல்களையும் அறிந்துகொள்வதற்கு இந்த சேவை தளம் உதவிகரமாக இருக்கும்.

அனைத்து அமைப்புசாரா தொழில்களையும் ஒருங்கிணைத்து அவர்களுக்கான திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு அரசுக்கும், இந்த சேவை தளம் துணை புரியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள ஜார்கண்ட் மாநிலத்தில், இதுவரை 3 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ரொக்கம் மற்றும் பரிசுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு கே ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

ராஞ்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை தேர்தல் அதிகாரிகள் கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

தேர்தல் ஆணைய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, 50 லட்சத்திற்கும் கூடுதலாக உரிய ஆவணங்கள் இன்றி பணம் மற்றும் பரிசுப்பொருட்களை எடுத்துச்சென்றால், அவை பறிமுதல் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

பத்து லட்சம் ரூபாய்க்கும் கூடுதலாக பணம் கொண்டு செல்லப்பட்டால் வருமானவரித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு ரவிகுமார் கூறினார்.

**<<<<<>>>>>**

வடக்கு காஸா பகுதியில் உள்ள **Beit** நகரில் இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில், 87 பேர் கொல்லப்பட்டனர். 40-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இத்தகவலை தெரிவித்துள்ள ஹமாஸ் அமைப்பினர் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, லெபனானில் உள்ள ஹெஸ்புல்லா அமைப்பினர் மீது இஸ்ரேல் விமானப்படைகள் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

பல்வேறு பகுதிகளில் வசித்துவரும் மக்கள் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வடக்கு இஸ்ரேலில் உள்ள **Caesarea** பகுதியில் அமைந்துள்ள பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாகு வீட்டின் அருகே ட்ரோன் மூலம் கண்காணிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டதையடுத்து, இஸ்ரேல் மேலும் புதிய தாக்குதலை தொடங்கியுள்ளது.

இதனிடையே, காஸா பகுதியில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கூடுதலாக நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று ஐ நா தெரிவித்துள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை மேற்கொள்வதற்கு சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஐ நா வலியுறுத்தியுள்ளது.

**<<<<<>>>>>**

***விளையாட்டுச் செய்திகள்***

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஜோஹர் கோப்பைக்கான ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா 6-4 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

தில்ராஜ் சிங், எஸ் என் திவாரி ஆகியோர் தலா இரண்டு கோல்களை போட்டனர்.

முகமது **Dad,** மன்மீத் சிங் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர்.

இந்த போட்டிகளில் இந்தியாவுக்கு கிடைத்த இரண்டாவது வெற்றி இதுவாகும்.

----------

பெங்களுருவில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

-------

ஆசிய **Cross Country** தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு தங்கம், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

**<<<<<END>>>>>**